**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-05032021-3646

Volume: 5

Issue: 3

Month: January

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.10.2020

Accepted: 10.12.2020

Published: 01.01.2021

Citation:
Raja, A. "Pallava Period Muthadevi Sculpture in the Tamil University Museum." *Shanlax International Journal of Tamil Research*, vol. 5, no. 3, 2021, pp. 99–106.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i3.3646

*Corresponding Author:
rajaarchy@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Pallava Period Muthadevi Sculpture in the Tamil University Museum

**Dr. A. Raja**
*Head, Department of Museum, Tamil University*
*Thanjavur, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0001-8820-2413

**Abstract -** Humans, who worshiped nature in ancient times, began to worship deities on the basis of images in historical times. Excavations at Harappa have uncovered a standing image of a mother goddess that is a testament to the existence of mother worship in the Indus Valley Civilization. An old woman with a female figure was found in the Adichanallur excavation in Tirunelveli district in Tamil Nadu. Similarly, the Sangam literature Manimegalai and Silappathikaram give us references to the worship of the goddess. It is noteworthy that sculptures of this deity have been found in the northern and southern parts of Tamil Nadu. However, the evidence we have found shows that there are numerous sculptures of the Goddess in the northern districts. However, the evidence we have found shows that there are numerous sculptures of the Goddess in the northern districts. Most of the places of worship where the statue of the Goddess is located are very ancient. Thus this article explores and explains the sculpture of Moothadevi (Jeshtadevi) in the Tamil University Museum

**Keywords -** Tamil Nadu History, pallava kingdom, Moothadevi sculpture in Excavations, Moothadevi sculpture in Purana History, Pallavas Moothadevi, Moothadeva sculptures in Tamil Nadu, Moothadevi sculpture in Temples.

**References**

1. Gopinatha Rao.T.A. (1914). Elements of Hindu Iconography, Volume, II part2.
2. Gandhi.M. (2011). Pallavar Kaala silaigal, Avanam 22, Thamizhaga tholliyalkazhakam, Thanjavur.
3. Jayakumar.P., Rajavelu.S., Thangadurai.T. (2011). Pallavar Kaala Moothadevi, Avanam 22, Thamizhaga tholliyalkazhakam, Thanjavur.
4. Selvakumar.V. (2008). Avanam 19, Thamizhaga tholliyalkazhakam, Thanjavur.
5. Veeraragavan.C. (2015). Nadunaattu pakuthiyil kirama Deiva sirppangal, Avanam 26, Thamizhaga tholliyalkazhakam, Thanjavur.
6. Selvakumar.V., Chinnappan.K., (Edi) (2013), Thiruvathikkunnam vattara Varalarum Tholliyalum, Kalvi vazhikatti maiyam, Thiruvathikkunnam.
7. Muthu Ethirajan. (2005). Moodevi, Avanam 16, Thamizhaga tholliyalkazhakam, Thanjavur.
8. Sritharan.K. (2015). Pallavar Kaala settai sirppam, Avanam 26, Thamizhaga tholliyalkazhakam, Thanjavur.
9. ………… (2014). Settai sirppam, Avanam 25, Thamizhaga tholliyalkazhakam, Thanjavur.
10. Emmanuvel.C. (2019). Pallavar Kaala moothadaevi, Avanam 30, Tholliyalkazhakam, Thanjavur.

11. Rajavelu.S. (2018). Devasthana moothadevi, Avanam 29, Tholliyalkazhakam, Thanjavur.
12. Santhanam.R. (2018). Mangammalpuram moothadevi, Avanam 29, Tholliyalkazhakam, Thanjavur.
13. Gopinatha Rao, T.A. (1914). Elements of Hindu Iconography, Volume, II part2.
14. Selvakumar.V., Chinnappan.K., (Edi) (2013), Thiruvathikkunnam vattara Varalarum Tholliyalum, Kalvi vazhikatti maiyam, Thiruvathikkunnam.
15. Rajendran.Karu. (2007). Jeshdadevi Kalvettukal, Avanam 18, Thamizhaga tholliyalkazhakam, Thanjavur.

# தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தில் பல்லவர் கால மூத்ததேவி சிற்பம்

*முனைவர் ஆ. ராஜா*
தலைவர், அருங்காட்சியகத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***ஆய்வுச் சுருக்கம்:*** *பழங்கற்காலங்களில் இயற்கையை வழிபட்ட மனிதர்கள், வரலாற்றுக் காலமாகிய சங்காலத்தில் தெய்வங்களை உருவ அடிப்படையில் வழிபடத் தொடங்கினர். முதன் முதலில் சிந்துச்சமவெளி நாகரிகத்தில்தான் தாய்த்தெய்வ வழிபாடு இருந்தமைக்கான சான்றாக நின்ற நிலையிலுள்ள தாய்த்தெய்வ உருவம் ஹரப்பா அகழாய்வில் கிடைத்தது. தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் அகழாய்வில் பெண் உருவத்துடன் கூடிய முதுமக்கள் தாழி ஒன்று கண்டறியப்பட்டது. அதேபோன்று சங்க இலக்கியங்களான மணிமேகலையும், சிலப்பதிகாரமும் தாய்த் தெய்வ வழிபாடு பற்றி குறிப்புகள் தருகின்றன. தமிழகத்தின் வட பகுதிகளிலும் தென் பகுதிகளிலும் இத்தேவி சிற்பங்கள் கண்டறியப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. இருப்பினும் நமக்கு கிடைத்தச் சான்றுகள் வட மாவட்டங்களில் மிகுதியாக மூத்ததேவி சிற்பங்கள் இருப்பதைக் காட்டுகிறது. பெரும்பாலும் மூத்ததேவி சிற்பம் இருக்கக் கூடிய வழிபாட்டுத் தலங்கள் மிகத்தொன்மையாகவே உள்ளன. அந்தவகையில் தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியத்திலுள்ள முத்ததேவி (ஜேஷ்டாதேவி) சிற்பத்தைப் பற்றி ஆராய்ந்து விளக்குகிறது இக்கட்டுரை.*

***முதன்மைச் சொற்கள்:*** *தமிழக வரலாறு, பல்லவர் அரசாட்சி, முத்ததேவி சிற்பம், தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகம், மூத்ததேவி வழிபாடு.*

பழங்கற்காலங்களில் இயற்கையை வழிபட்ட மனிதர்கள், வரலாற்றுக் காலமாகிய சங்காலத்தில் தெய்வங்களை உருவ அடிப்படையில் வழிபடத் தொடங்கினர். அதுவே, பிற்காலத்தில் பெரிய அளவில் வளர்ச்சியடைந்து பெரும்பான்மையானோர் தெய்வங்களை வழிபடும் வழக்கமாக உருவெடுத்தது. முதன்முதலில் சிந்துச்சமவெளி நாகரிகத்தில்தான் தாய்த்தெய்வ வழிபாடு இருந்தமைக்கான சான்றாக நின்ற நிலையிலுள்ள தாய்த்தெய்வ உருவம் ஹரப்பா அகழாய்வில் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து தமிழகப் பகுதிகளில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களில் முதுமக்கள் தாழிகள் மிகுதியாகக் கிடைத்தன. அவற்றில் பெண் உருவத்துடன் கூடிய முதுமக்கள் தாழி ஒன்று கண்டறியப்பட்டது. அதேபோன்று சங்க இலக்கியங்களான மணிமேகலையும், சிலப்பதிகாரமும் தாய்தெய்வ வழிபாடு பற்றி நமக்குக் குறிப்புகள் தருகின்றன. அந்தவகையில் தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியத்தில் சிற்பக்கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள மூத்ததேவி (ஜேஷ்டாதேவி) சிற்பத்தைப் பற்றி ஆராய்ந்து விளக்குகிறது இக்கட்டுரை.

தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சி யகத்தில் தொல்லியல், நாணயங்கள், சிற்பங்கள், ஆயுதங்கள், நாட்டுப்புறக் கலைகள், விளக்குகள், இசைக்கருவிகள்,

வீட்டு உபயோகப் பொருட்கள், தற்காலக் கலைகள், வேளாண் கருவிகள் என பத்துக் காட்சிக் கூடங்கள் உள்ளன. இவற்றில் சிற்பக்கூடத்தில் தொன்மை வாய்ந்த கற்சிற்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் பல்லவர் காலக் கலைப்பாணியில் உள்ள மூத்ததேவி சிற்பமும் ஒன்றாகும். இவற்றுடன் சோழர் காலச் சிற்பங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### புராண வரலாற்றில் மூத்ததேவி

டி.ஏ கோபிநாத ராவ், மூத்ததேவி பற்றி விரிவாகக் கூறுகின்றார். இலிங்கப் புராணம் மூத்ததேவியைப் பற்றி செய்திகள் தருகின்றன (Gopinatha Rao, T.A.1914,2(2):394). பாற்கடலில் அமுது எடுப்பதற்காகத் தேவர்களும், அசுரர்களும் கடைந்தபோது, இலக்குமிக்கு முன்னதாக, மூத்ததேவி தோன்றியதனால், யாரும் இவளை மணந்துகொள்ள முன்வரவில்லை என்று கூறப்படுகின்றது. இலக்குமியை விஷ்ணு மணந்தார். பிறகு, இவளை பிராமண முனிவரான துஷாகர் என்பவர் மணந்து, வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அவளின் குணாதிசயங்களை முனிவர் நன்கு அறிந்திருந்தார். எப்போதெல்லாம் விஷ்ணுவைப் புகழ்ந்து, முனிவர் வழிபடுகிறாரோ, அப்போதெல்லாம் அவள் தனது காதுகளை மூடிக்கொள்வாளாம். மேலும் சிவனைப் போற்றும்போது, அவள் மகிழ்ச்சியடைவதையும் முனிவர் அறிந்து கொண்டார்.

ஒரு நாள் தனது மனைவியுடன் காட்டிற்குச் சென்ற அந்த முனிவர், காட்டில் தவம்புரிந்து கொண்டிருக்கும்போது,அவருக்குத் தெரியாமலே மூத்ததேவி வீட்டிற்குப் புறப்பட்டு வந்து விட்டாள். மிகவும் வருந்தமடைந்த முனிவர், இதனை யாரிடம் கூறலாம் என்று எண்ணியபோது, அப்போது மார்க்கண்டேயர் வந்தார். அப்போது முனிவர் தனது மனைவியின் போக்குகளை எடுத்துக் கூறினார். எனக்கு ஏதாவது ஆலோசனை கூறுங்கள் என்று முனிவர் கேட்டார். அதற்கு மார்க்கண்டேயர் எங்கேயாவது அமங்கல நிகழ்ச்சி நடந்தால், அங்கு உன் மனைவியை அழைத்துச்செல் என்று கூறினார். அவ்வாறே, அவர் வீடுகளில் சண்டை நடக்குமிடம், மற்றும் வைதீக வழிபாடு நடக்கும் இடம், மூத்தவர்கள் இன்பத்தை அனுபவிக்கும் இடம் போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்றார். அதன் பின்னர் துஷாகர் தனது மனைவியிடம் மேல் உலகத்திற்குச் சென்று அங்கு இருவரும் தங்கி அமைதியாக வாழலாம் என்று அழைத்தார். ஆனால் மூத்ததேவி அங்கு வரமுடியாது என்று கூறிவிட்டாள். அதன்பின்னர், முனிவர் அருகிலுள்ள குளத்தில் மூழ்கி மறைந்தார் என்று புராணக்கதைக் கூறுகின்றது. எனவே, மூத்ததேவி என்பவள் ஒரு வாழாத தெய்வமாகக் காட்சிப்படுத்தப்படுகிறாள்.

கி.பி 300 க்கு முன்பிருந்தே மூத்ததேவி வழிபாடு சிறப்பாக இருந்தநிலையில், பிற்காலத்தில் மூத்ததேவி வழிபாடு குறைந்து கொண்டு வந்ததைக் காணமுடிகிறது.

### பல்லவர் கால மூத்ததேவி

மூத்த தேவி சிற்பம் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் காணக் கிடைக்கின்றன. இன்று வழிபாடு குறைந்த இத்தெய்வம் பல்லவர் காலத்தில் மூத்ததேவியாகவும், தாய்த்தெய்வமாகவும் வழிபாட்டு நிலையில் இருந்துள்ளது. பின்னர் பல்லவர்களும் பாண்டியர்களும் இத்தெய்வத்தைச் சைவசமயக் கடவுள்களில் ஒன்றாகக் கருதி கோயில்களில் இடம்பெறச் செய்து வழிபடத் தொடங்கினர். ஆனால் பிற்காலங்களில் வழிபாட்டிலிருந்து ஒதுக்கப் பட்டத் தெய்வமானது. இத்தெய்வ வழிபாட்டைக் குறித்து ஆசிரிய நிகண்டு, சூளாமணி நிகண்டு ஆகியவை சுட்டுகின்றன. மூத்ததேவி வளமைக்

கடவுளாகக் கருதப்பட்டாள். வளமையையும் நல்லதையும் செய்கின்ற தெய்வமாகிய மூத்தவள் துன்பத்தைப் போக்கும் கடவுளாகவும், தூய்மையையும், ஊரில் எவ்வித நோயும் வராமல் தடுக்கின்ற தெய்வமாகவும் அக்காலத்தில் கருதப்பட்டாள். இச்சிற்பம் மூத்ததேவி என்றும், சேட்டை என்றும் மூதேவி என்றும் ஜேஷ்டாதேவி என்றும் அழைக்கப்படுகின்றது. சேட்டை இலக்குமிக்கு மூத்ததால் மூத்தவள், மூத்ததேவி என்ற பெயரையும் பெற்றுள்ளாள். எனவே சேட்டை இந்து மதத்தில் தாய்த்தெய்வங்களில் ஒன்றாகும்.

இந்தவகையான மூத்ததேவி சிற்பம் தமிழகத்தில் தற்போது பெரும்பான்மையான இடங்களில் ஊருக்கு வெளிப்புறங்களில் வைத்து வழிபடும் நிலையினைக் காணமுடிகின்றது. இதற்குக் காரணம் இச்சிற்பம் உருவ அமைப்பிலும், சிற்ப அமைவுபடியும் சற்று உடற்பாகங்கள் பருத்த நிலையில் காணப்படுவதால், பிற்காலங்களில் இதை வெளிப்புறங்களில் வைக்கும் நிலை ஏற்பட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. அதேபோல் பல்லவர் காலத்திற்கு பிறகு சிற்பக்கலையில் ஏற்றப்பட்ட பெரும் வளர்ச்சியின் காரணமாகக் கலைநயமிக்கத் தெய்வச் சிற்பங்களைச் சோழர், நாயக்கர் காலங்களில் படைக்கப்பட்டதன் விளைவோ எனவும் எண்ணத் தூண்டுகிறது. சங்க காலத்தில் தமிழர்களின் தாய்த் தெய்வமாகக் கொற்றவையும் இருந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக அருங்காட்சியகச் சிற்பக் கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள மூத்ததேவி சிற்பமானது தஞ்சாவூர் மாவட்டம், நெல்லித்தோப்பு என்ற ஊரில் கண்டறியப்பட்டதாகும். இச்சிற்பம் 60செ.மீ உயரம், 50 செ.மீ அகலம், 16 செ.மீ தடிமம் கொண்டதாகக் காணப்படுகின்றது. தனிக்கல்லிலான இச்சிற்பம் மூத்ததேவியின் இரு குழந்தைகளான மாந்தன், மாந்தி உருவங்களை வலது, இடது பக்கங்களில் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இம் மூத்ததேவி சிற்பமானது இரு கால்களையும் அகல விரித்துத் தொங்கவிடப்பட்டுப் பீடத்தில் அமர்ந்தநிலையில் காட்சியளிக்கிறது. வலக்கரம் தாமரை மலரை ஏந்தியும், இடக்கரம் பீடத்தின் மீதும் உள்ளது. தலையில் கொண்டையும் அதன்மீது மகுடமும் காணப்படுகின்றது. வட்டவடிவ முகவமைப்பினையும் நேர்கொண்ட பார்வையும் கொண்டுள்ள மூத்ததேவியின் காதுகளில் மகரகுண்டலமும், கழுத்தில் பட்டையான அணிகலன்களும் (ஆரம்), தோளில் கேயூரமும், மார்பில் வீரச் சங்கிலியும், கைகளில் வளையல்களும் அணிசெய்கின்றன. இடையிலிருந்து கணுக்கால் வரை மடிப்புடன்கூடிய ஆடைக்கட்டு உள்ளது. மூத்ததேவின் ஆண் மகனான மாந்தன் உருவம் வலப்புறத்தில் எருதுவின் முகத்தோடு காணப்படுகிறது. அவனது வலக்கரம் கதையை ஏந்தியுள்ளது. இடக்கரம் தொடை மீதும், ஆடையுடனும் பூணூலுடனும் உள்ளவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இடபுறத்தில் பெண் குழந்தையாககிய மாந்தி மனித உருவத்தில் பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் வலப்பக்கம் தாமரை மலரை ஏந்தியும், இடக்கரம் பீடத்தின் மீதும் வைத்தவாறும் உள்ளது. தலையினைக் கரண்ட மகுடமும், காதுகளைக் குண்டலமும், கழுத்தினை ஆரமும் அணி செய்கின்றன (படம்.1). இச்சிற்பத்தின் சிற்பக்கலை அமைவை நோக்கும்போது கி.பி.8ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதலாம்.

## தமிழகத்தின் பிற பகுதிகளில் மூத்ததேவி சிற்பங்கள்

இதேபோன்று தமிழகத்தின் பெரும் பான்மையான இடங்களில் மூத்த தேவி

சிற்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன. குறிப்பாக வேலூர் மாவட்டம், அரக்கோணத்தில் கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிற்பமும் (காந்தி, மா. 2011, பக். 226-228) திருவாரூர் காமாட்சியம்மன் கோயிலுக்கு அருகில் பல்லவர் கால மூத்ததேவி சிற்பமும் (ஜெயக்குமார், பா. 2011, பக். 228-229), கரூர் வட்டத்திலுள்ள செங்காளிபுரத்தில் கி.பி.9-10 நூற்றாண்டைச் சார்ந்த மூத்ததேவி சிற்பம் ஒன்றும் கிடைத்துள்ளன (செல்வகுமார், வீ. 2008, பக். 223-224). தமிழ்நாட்டின் வட மாவட்டங்களைக் கொண்டுள்ள தொண்டை மண்டலத்திலும், விழுப்புரம் மாவட்டத்தைச் சுற்றியுள்ள நடுநாட்டுப் பகுதியிலும் மூத்ததேவி சிற்பங்கள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இவற்றில் குறிப்பாக எழுத்துடன் கூடிய மூத்த தேவி சிற்பம் ஒன்று திருக்கோவிலூர் வட்டம், ஐம்பை என்ற ஊரில் கண்டறியப்பட்டது. நடுநாட்டுப் பகுதியின் சில ஊர்களில் மூத்ததேவி சிற்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவை கூடலூர், பாண்டூர், கிராமம், அகரம், சித்தாமூர், பேரங்கியூர், மேலமங்கலம், தென்மங்கலம், கீழ பெருமங்கலம், திருவெண்ணைநல்லூர், சித்தலிங்கமடம், டி. புதுப்பாளையம், திம்மச்சூர், முன்னூர், ஒங்கூர், சோமாண்டார்குடி, கொத்தமங்கலம், விக்கரவாண்டி, வைரபுரம், அவியனூர், பிடாகம், திருவாமாத்தூர், தென்சிறுவளூர், கீழ்வீதி, மேல் ஒழுக்கூர், பனமலை ஆகிய இடங்களில் கண்டறியப்பட்டுள்ளன (வீரராகவன், சி. 2015, பக் 291-303).

விழுப்புரம் பகுதிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் குறிப்பாகத் திருவதிக்குன்னம், பேரங்கியூர், திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள திருமச்சூர், அவியலூர், திண்டிவனம் வட்டத்திலுள்ள அனந்த மங்கலம், கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள சோமுண்டார்குடி ஆகிய இடங்களிலும் மூத்ததேவியின் சிற்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன (செல்வகுமார், வீ., சின்னப்பன், கு.2013, பக். 62-67). செய்யாறு ஆற்றுக்குக் கிழக்கு பகுதியிலும், அனுமன் தண்டலத்திலிருந்து இளநாகர் செல்லும் சாலையிலும் பல்லவர் கால மூத்ததேவி சிற்பங்கள் உள்ளது (முத்து எத்திராசன், 2005, பக்.61-162). இருப்பினும் காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகரம் வட்டம், அரையப்பாக்கம் அருணாதீசுவரர் திருக்கோயிலில் வடமேற்கு பகுதியிலுள்ள மூத்ததேவி சிற்பமும் (ஸ்ரீதரன், கி. 2015, பக். 318-319), பெரும்பேர் தான்தோன்றீசுவரசுவாமி திருக்கோயில் மண்டபத்திலுரள்ள மூத்ததேவி சிற்பமும் (ஸ்ரீதரன், கி.2014, ப.196) தற்போது வழிபாட்டுநிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவற்றுடன் பண்ருட்டி வட்டத்திலுள்ள நத்தம் ஏரி, ஆனத்தூர் நத்தம் ஆகிய இடங்களில் பல்லவர்கால மூத்த தேவி சிற்பங்கள் கண்டறியப்படுள்ளன (இம்மானுவேல், சி.2019, ப.247). ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டத்திலுள்ள அனுமன்பள்ளி என்ற கிராமத்தில் அமைந்துள்ள அனுமனீஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் மேற்கு பிரகாரத்தில் பல்லவர் கால மூத்ததேவியின் சிற்பங்கள் இருப்பதையும், அவை தற்போது வழிப்பாட்டு நிலையில் இருப்பதையும் காணமுடிகின்றது(படம்.2).

தமிழகத்தின் மையப் பகுதியான காவேரி ஆற்றுப்படுகையில் பேட்டைவாய்த்தலை அருகிலுள்ள தேவஸ்தானம் சாலைக்கருகில் கலிங்கு வாய்க்கால் மேட்டில் கி.பி. 9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மூத்ததேவி சிற்பம் ஒன்றும் (இராசவேலு, சு.2018, ப.291) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்திலுள்ள வலங்கைமான் செல்லும் சாலையில் அமைந்துள்ள மங்கம்மாள் புரத்தில் கி.பி.8-9ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மூத்த தேவி சிற்பம் ஒன்று

கண்டறியப்பட்டுள்ளன. இச்சிற்பத்தினை இங்குள்ள மக்கள் மாணிக்க நாச்சியம்மன் என்ற பெயரில் வணங்கி வருகின்றனர் *(சந்தனம், இரா. 2018, ப.292).*

"குமாரதந்திரம்" என்னும் நூல் மூத்ததேவியை (சேட்டை) எட்டு மற்றும் பன்னிரண்டு பரிவார தேவதைகளில் ஒன்றாகக் குறிப்பிடுகின்றது (Gopinatha Rao, T.A.1914,2(2),p.423). எட்டு பரிவாத தேவதைகளை அமைக்க வேண்டுமென்றால், கிழக்கில் யானையும், தென்கிழக்கில் சாஸ்தாவையும், தெற்கில் பிரம்மாவையும், தென்மேற்கில் ஏழுதாய் களையும், மேற்கில் மூத்ததேவியையும், வடமேற்கில் துர்கையையும், வடக்கில் ஷேத்திரபாலரையும், வடகிழக்கில் சுமித்திரிகாவையும் அமைக்கவேண்டும் என்று கூறுகின்றது. விழுப்புரம் பகுதியிலுள்ள எண்ணாயிரத்தில் உள்ள முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டு, இவற்றில் மூத்த தேவி, சப்தமாதர்கள், துர்க்கை, மகாசாஸ்தா ஆகிய கடவுளர்களைக் குறிப்பிடுவது, மேற்கண்ட கூற்றின் சிறப்பை விளக்குகின்றது. நாகபட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள செம்பனார்கோயில் சுவர்ணபுரீஸ்வரர் மற்றும் புன்செய் நற்றுணையீஸ்வரர் ஆகிய திருக்கோயில்களில், இத்தேவியின் சிற்பங்கள் வடமேற்கு மூலையில் வைக்கப் பட்டுள்ளமை இங்குச் சுட்டத்தக்கதாகும் *(செல்வகுமார், வீ., சி ன்னப்பன், கு.2013, ப.67).* அதேபோன்று மேற்சுட்டிய ஈரோடு மாவட்டம், அனுமன் பள்ளியிலுள்ள திருக்கோயிலிலும் வடமேற்கு திசையில் மூத்த தேவி வைக்கப்பட்டுள்ளதை இங்கு குறிப்பிடுவது சிறந்ததாகும்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டத்திலுள்ள நெய்வேலி என்ற ஊருக்கு வடபுறம் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சிவன்கோயில் முன்பு கி.பி. 11-12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுடன் கூடிய சேஷ்டாதேவி சிற்பம் வைக்கப்பட்டுள்ளது *(இராஜேந்திரன், கரு. 2007, ப.207).* இக்கல்வெட்டானது கொடும்பாளூர் செட்டிகளில் "நிமகுச்சன்" என்பவர் திருக்கேட்டைக்கிழத்தியார் என்ற சேட்டை சிற்பத்தினைச் செய்து வைத்ததைக் குறிப்பிடுகிறது. இச்சேட்டை சிற்பத்தினை திருக்கேட்டைக்கிழத்தியார் என்று பெயரிட்டுக் கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளமை நோக்கத்தக்கதாகும். மேற்குறித்த சிற்பத்துடன் கல்வெட்டும் சேர்ந்து காணப்படுவதால் காலத்தை எளிதில் கணிக்கமுடிந்தது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கிடைத்த மூத்ததேவியின் சிற்பங்களை ஒப்புநோக்கும்போது பிற பகுதிகளில் அமைந்துள்ள சிற்பமைவினை ஒத்தவையாகவே பல்கலைக்கழக அருங்காட்சியத்திலுள்ள மூத்ததேவி சிற்பம் உள்ளது. ஆனால், தமிழகத்தின் வட பகுதிகளில் மூத்ததேவி சிற்பங்கள் மிகுதியாகக் காணப்படுவதை கிடைத்தச் சான்றுகளின் வாயிலாக அறியமுடிகின்றது. அதேபோல் தென் பகுதிகளில் சில இடங்களில் மட்டும் இத்தேவி சிற்பங்கள் கண்டறியப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. இருப்பினும் தொடக்கத்தில் இத் தெய்வழிபாடு சிறந்து விளங்கியதையும், பிற்காலங்களில் இதன் வழிபாடு நிலை சமூகத்தில் குறைந்துகொண்டேவந்ததையும் உணரமுடிகின்றது. ஆனாலும் சில திருக்கோயில்களில் வடமேற்கு புறங்களில் மூத்ததேவி நிலைநிறுத்தப்பட்டு இன்றும் வழிபட்டு வருவதையும் காணமுடிகிறது. பெரும்பாலும் மூத்ததேவி இருக்கக்கூடிய வழிபாட்டுத் தலங்கள் மிகத்தொன்மையாகவே உள்ளன. அந்த பழமைவாய்ந்த திருக்கோயில் இன்றும் சில அழிந்து வரும் நிலையினையும், அங்கு காட்சித்தந்த தெய்வச் சிற்பங்களும் குறிப்பாக மூத்ததேவி போன்ற தொன்மைக்குச் சான்றாக விளங்கும் சிற்பங்கள் அழிந்தநிலையில் காணப்படுவது நம் கலைக்கும் பண்பாட்டுக்கும் பெரும் இழப்பு.

**சான்றெண் விளக்கம்**

1. Gopinatha Rao, T.A. (1914). Elements of Hindu Iconography, Volume, II part2.
2. காந்தி,மா. (2011). பல்லவர் காலச் சிலைகள், ஆவணம் இதழ் 22, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.
3. ஜெயக்குமார், பா., இராசவேலு,சு., தங்கத்துரை,த. (2011). பல்லவர் கால மூத்ததேவி, ஆவணம் இதழ் 22, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.
4. செல்வகுமார்,வீ. (2008). ஆவணம் இதழ் 19, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 2008.
5. வீரராகவன், சி. (2015). நடுநாட்டுப் பகுதியில் கிராமத்தெய்வச் சிற்பங்கள், ஆவணம் இதழ் 26, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.
6. செல்வகுமார்,வீ., சின்னப்பன், கு (பதி). (2013). திருவதிக்குன்னம் வட்டார வரலாறும் தொல்லியலும், கல்வி வழிகாட்டி மற்றும் ஆராய்ச்சி மையம், திருவதிக்குன்னம்.
7. முத்து எத்திராசன். (2005) மூதேவி, ஆவணம் இதழ் 16, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.
8. ஸ்ரீதரன்,கி. (2015). பல்லவர் கால ஜேட்டை சிற்பம், ஆவணம் இதழ் 26, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.
9. (2014). ஜேட்டை சிற்பம், ஆவணம் இதழ் 25, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.
10. இம்மானுவேல், சி. (2019). பல்லவர் கால மூத்ததேவி மற்றும் சாமுண்டி நத்தம், ஆவணம் இதழ் 30, தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.
11. இராசவேலு,சு. (2018). தேவஸ்தானம் மூத்ததேவி, ஆவணம் இதழ் 29, தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.
12. சந்தனம், இரா. (2008). மங்கம்மாள்புரம் மூத்ததேவி, ஆவணம் இதழ் 29, தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.
13. Gopinatha Rao, T.A. (1914). Elements of Hindu Iconography, Volume, II part2.
14. செல்வகுமார்,வீ., சின்னப்பன், கு. (பதி). (2013). திருவதிக்குன்னம் வட்டார வரலாறும் தொல்லியலும், கல்வி வழிகாட்டி மற்றும் ஆராய்ச்சி மையம், திருவதிக்குன்னம்.
15. இராஜேந்திரன், கரு. (2007). ஜேஷ்டாதேவி கல்வெட்டு, ஆவணம் இதழ் 18, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்.



படம்.1. நெல்லித்தோப்பு, தஞ்சாவூர் - மூத்ததேவி
நன்றி: தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகம், தஞ்சாவூர்.



படம்.2. அனுமன்பள்ளி, ஈரோடு - மூத்ததேவி